[1969 மார்ச் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியை ஒட்டித்தான் உறுப்பினர்களுடைய துணைக் கேள்வி அமையவேண்டும்.

கீழ்பருத்திக்குடி பஞ்சாயத்துப் பிரிவு.

*466 வின.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிதம்பரம் தாலூகா, குமராட்சி யூனியனைச் சேர்ந்த கீழ்ப் பருத்திக்குடிப் பஞ்சாயத்திலிருந்து மேலப் பருத்திக்குடிப் பஞ்சாயத்து பிரிந்து இரண்டு வருடமாகியும் இப் பஞ்சாயத்துக்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் பிரிக்கப்படாமல் இருப்பதின் காரணம் என்ன ?

(இ) இதுகுறித்து அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :

(அ) & (இ) : கீழ்ப் பருத்திக்குடி, மேல் பருத்திக்குடி ஊராட்சி மன்றங்களுக்கிடையே சொத்துக்களைப் பிரிப்பதுகுறித்து ஏற்கெனவே தென் ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் தனது 19—2—1968 தேதியிட்ட நடவடிக்கைகளில் ஆணை பிறப்பித்துள்ளார்.

Employees in film trade.

*467 *Q.*—**Thiru N. S. V. Chithan : Will the Hon. the Minister for Labour be pleased to state whether the Government are aware that large number of persons employed in film trade are keeping idle consequent on the stoppage of production in this State ?**

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : திரைப்படத் தயாரிப்புத் தொழிலில் சென்ற ஆண்டு பணிபுரிந்தவர்களில் எத்தனை பேர்கள் இந்த ஆண்டு பணி புரிகிறார்கள் ? எத்தனை பேர்கள் பணிபுரியவில்லை என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதைப்பற்றி என்னிடம் விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், ஸார் எத்தனை தொழிலாளர்கள் வேலையில் இருக்கிறார்கள் என்ற விவரம் இல்லாமல், அமைச்சர் அவர்கள் யாரும் வேலையில்லாமல் நீக்கப் படவில்லை என்ற தகவல் எப்படிக் கொடுக்கமுடியும்.?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அங்கத்தினர் கேட்டது திரைப் படத் தொழிலில் திரைப்படத் தயாரிப்பு நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து அத்தொழிலில் ஈடுபட்டுள்ள பெருவாரியான நபர்கள் வேலையின்றி இருக் கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா என்று கேட்டார்கள். நான் இல்லை என்று பதில் சொன்னேன். மொத்தமாக ஸ்டுடியோவில் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்ற கேள்வியையும் அங்கத்தினர் கேட்கவில்லை. அதற்கான பதிலும் இங்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியிலிருந்து அந்தக் கேள்விக்கும் விடை வந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது.

திரு. கே. விநாயகம் : குறிப்பாகக் கணக்கு இல்லை என்றாலும்கூட, போன ஆண்டு இந்தத் தொழிலில் அதிகமான மக்கள் ஈடுபட்டார்கள் என்பதும், இந்த ஆண்டு அதைவிட அந்த எண்ணிக்கை குறைந்திருக்கிறது என்பதும், அந்த விஷயமாவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஏ.வி.எம். ஸ்டுடியோவில் சென்ற ஆண்டு வேலை செய்த தொழிலாளர்கள் 160 பேர்கள், படத் தயாரிப்பு நிறுத்தப்பட்ட காரணத்தினால் குறைக்கப்பட்டார்கள். அதற்குப்பிறகு உடனே முருகன் பிரதர்ஸ் என்ற பெயரில் அவர்களுடைய பிள்ளைகளே அந்தத் தொழில் நிறுவனத்தை ஏற்றுக் கொண்ட காரணத்தினால், மீண்டும் தொழில் ஆரம்பிக்கப்பட்டு 70 தொழிலாளர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதேமாதிரி அருணாசலம் ஸ்டுடியோ மூடப்பட்டுவிட்ட காரணத்தினால் 50 தொழிலாளர்கள் வேலை இழந்தார்கள். ஏ. எல். எஸ். அந்த ஸ்டுடியோவை எடுத்துக் கொண்ட பிறகு 30 தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டது. பிரகாஷ் ஸ்டுடியோவில் 36 பேர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள், பின்பு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். திரு. சித்தன் அவர்கள் மொத்தமாகக் கேள்வி கேட்டார்கள். மொத்தமாகச் சேர்த்துதான் என்னிடம் விவரம் இருந்தது. பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் பற்றி ஸ்டுடியோ வாரியாக தனியாகக் கேள்வி கேட்டிருந்தால் ஸ்டுடியோ வாரியாகச் சொல்லியிருக்க முடியும்.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் சார், அருணாசலம் ஸ்டுடியோவில் 50 பேர்கள் பாதிக்கப்பட்டார்கள், அவர்களில், 30 பேர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டதாகவும், மற்ற 20 பேர்களைச் சேர்க்கப்படவில்லை என்றும் தெரிகிறது. அதாவது அரசாங்கத்தின் கணக்கில் வந்திருக்கிறதா ? அதையாவது முன்னால் அறிவித்திருந்தால் நல்லது அல்லவா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைக் கேளுங்கள். அதைச் சொல்லியிருக்கலாம் இல்லையா என்பது கேள்வியாகாது. அமைச்சர் விளக்கம் அளித்து விட்டார்கள். ஏன் இப்படிப்பட்ட விடை அளிக்கவில்லை என்று சொல்வது கேள்வியாகாது.

திரு. டி. மார்ட்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அருணாசலம் ஸ்டுடியோவிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட 50 பேர்கள் வேலை இழந்தார்கள் என்றும், அவர்களில் 30 பேர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள் என்றும் சொன்னார்கள். மீதம் உள்ள 20 பேர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்களா, இல்லையா என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கேள்வி கேட்டிருப்பது, " பெருவாரியான நபர்கள் வேலையின்றி இருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா " என்று இருக்கிறது. அதற்குப் பெருவாரியாக வேலை இழக்கவில்லை என்று பதில் அளித்திருக்கிறேன். மற்றவர்களையும் எடுப்பதுபற்றிப் பேச்சுவார்த்தை நடக்கிறது.

Cellular Concrete Plant.

*468 *Q.*—**Thiru A. M. RAJA : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether there is any proposal to start a cellular concrete plant in our State ?**

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : ஆம்.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, இந்தக் கல்லை எதற்கு உபயோகப்படுகிறது என்று கூற முடியுமா?